بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *05/12/2025* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## தபூக் போர் மற்றும் சில படையெடுப்புகளின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

கடந்த குத்பாவில் ஹஸ்ரத் கஅப் பின் மாலிக் மற்றும் மற்ற சில சஹாபா (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) பின்தங்கி விட்டது பற்றியும், அதனால் பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த மக்கள் மீது வெளிப்படுத்திய விருப்பமின்மை பற்றியும் கூறப்பட்டது. இது பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்களும் கூறியிருக்கின்றார்கள். இது குறித்து ஜமாஅத்திற்கு அறிவுரை கூறியிருக்கின்றார்கள். இது 1936 -ன் விஷயமாகும். அன்னார் (ரலி) இச்சம்பவத்தை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்: இங்கு (காதியானில்) நான் பார்த்திருக்கிறேன், எந்த மக்களோடு பேசுவது தடுக்கப்பட்டுள்ளதோ அவர்கள் மஹல்லாவில் (அஹ்மதி குடியிருப்புப் பகுதியில்) அஹ்மதிகளின் வீடுகளுக்கும் சென்று விடுகிறார்கள். அந்தப் பகுதியின் மக்கள் உறங்கிக் கொண்டிருப்பார்கள்; அவர்களுக்குத் தெரியவே தெரியாது.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) பிறிதோரிடத்திலும் கூறுகின்றார்கள்:** கஅப் பின் மாலிக் (ரலி) அவர்களுடைய சம்பவம் எப்படிப்பட்ட படிப்பினை ஆகும்! அவர்கள் அனைத்துப் போர்களிலும் நபி (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். ஆனால், தபூக் போரில் சோம்பலினால் பின்தங்கி விட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் இவர்களுக்கு மிகவும் கடுமையான தண்டனை அளித்தார்கள். ஆனால், இன்றைய காலத்து மக்களும்தான் இருக்கின்றார்கள்! ஏதாவது விசாரித்தால், கேள்வி கேட்டால், “எங்களுடைய தொண்டுகளை மதிக்கவில்லை; எங்களை மதிக்கவில்லை” என்று கூறுகின்றார்கள். நினைவில் கொள்ள வேண்டும்! நிர்வாகம் வேறு; பணியாற்றுவது வேறு. நிர்வாகத்தை நிலைதிருக்கச் செய்வதற்காக தவறு இழைக்கின்றவர் எவராக இருந்தாலும் அவரிடம் கேள்வி கேட்கப்படுவதுண்டு. எனவே இறைகட்டளையின்படி மார்க்கத்திற்காக ஷைத்தானை விரட்டிடும் அளவுக்கு முயற்சிகளை செய்யுங்கள். ஆனால் உங்களைப் புகழ வேண்டும் என்பதற்காக ஒருபோதும் செய்யாதீர்கள். பணியாற்றி விட்டு, நம்முடைய தவறுகளில் நம்மை கேள்வி கேட்கப்பட மாட்டாது என்று எண்ணாதீர்கள்.

நீங்கள் இறைவனுக்குப் பேருதவி புரிந்து விட்டதாக நினைத்துக் கொண்டு, உங்கள் உதவியை நினைவூட்டவோ துன்பங்கொடுக்கவோ செய்யாதீர்கள். அனைத்து வழிவகைகளையும் கொண்டு இஸ்லாத்துக்குத் தொண்டாற்றுங்கள். பேருதவியாக (எண்ணி) செய்யாதீர்கள். மாறாக, தொண்டாற்றுங்கள். அல்லாஹ்வைத் திருப்திபடுத்த வேண்டும் என்ற ஆர்வம் இருக்க வேண்டும்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:* தபூக் போரின் பயணம் எந்த அளவிற்கு நுட்பமானதும், அருளுக்குரியதாகவும் இருந்தது என்றால், முழு அரேபியாவிலும் முஸ்லிம்களின் வலிமை நிலை பெற்றது. சிறிது நாட்களிலேயே முழு அரேபியாவில் இஸ்லாத்தின் கொடி பறக்க ஆரம்பித்துவிட்டது. இது தொடர்பாக **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:** தபூக் போரிலிருந்து திரும்பியதும், தாயிஃப் மக்களும் கட்டுப்பட சம்மதித்து விட்டார்கள். அதற்குப் பிறகு, அரேபியாவின் பல்வேறு கோத்திரங்களும் ஒருவர் ஒருவராக வந்து இஸ்லாத்தின் ஆட்சிக்குள் வர அனுமதி வேண்டினார்கள். முழு அரபியாவிலும் இஸ்லாத்தின் கொடி பறக்க ஆரம்பித்து விட்டது.

திரும்பி வந்த பிறகு ஒரு படையெடுப்பும் நிகழ்ந்தது. இது ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் படையெடுப்பு என்று அழைக்கப்படுகின்றது. இது நஜ்ரானின் ஒரு பதியான பனு ஹாரிசை நோக்கி அனுப்பி வைக்கப்பட்டது. ஒரு அறிவிப்பின் அடிப்படையில், இந்தப் படையெடுப்பு ரபியுல் அவ்வல் ஹிஜ்ரீ 10 ஆம் ஆண்டு நடந்தது. இந்தப் போர்ப்படையை அனுப்பும்போது நபி (ஸல்) அவர்கள் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்கு, "அந்தக் கோத்திரத்தின் மீது தாக்குதல் தொடுப்பதற்கு முன்பு மூன்று முறை அவர்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுங்கள். அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், பிறகே அவர்களுடன் போர் புரிய வேண்டும்" என்று வழிகாட்டல் வழங்கினார்கள்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் இந்த வழிகாட்டல் படி அமல் செய்தார்கள். அந்த மக்கள் அனைவரும் முஸ்லிம்கள் ஆகிவிட்டார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஒரு கடிதத்தை நபி (ஸல்) அவர்களுக்கு அனுப்பினார்கள். அதில், "தங்களது வழிகாட்டல்படி, நாங்கள் அவர்களுக்கு இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைத்தோம். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். இப்பொழுது நான் அவர்களிடம் தங்கி இருக்கின்றேன். அவர்களுக்கு மார்க்கத்துடைய கட்டளைகள், (செய்யுமாறு) ஏவப்பட்டுள்ளவை, (செய்யக்கூடாது எனத்) தடுக்கப்பட்டவை ஆகியவற்றைக் கற்றுக் கொடுக்கின்றேன். இனி தங்களிடமிருந்து என்ன கட்டளை கிடைக்கப் பெறுமோ அதற்கு ஏற்றவாறு அமல் செய்வேன்" என்று எழுதியிருந்தார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்த கடிதத்திற்கு இவ்வாறு பதில் எழுதினார்கள்: "பனு ஹாரிஸ் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள் என்பது உங்களுடைய கடிதம் மூலம் தெரிய வருகின்றது. எனவே நீங்கள் அவர்களுக்கு இறைவனின் நற்கூலி பற்றிய நற்செய்தியை வழங்குங்கள். மேலும், இறை தண்டனையைக் குறித்து அச்சுறுத்துங்கள். அவர்களில் சில நபர்களை அழைத்துக் கொண்டு என்னிடம் வாருங்கள்."

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அவர்களில் சில நபர்களை அழைத்துக்கொண்டு நபி (ஸல்) அவர்களிடம் வந்து விட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் கைஸ் பின் ஹுஸைன் அவர்களை பனூ ஹாரிஸின் அமீராக நியமித்தார்கள். ஷவ்வால் அல்லது துல் கஅதா மாதத்தின் இறுதியில் அவர்களைத் திருப்பி அனுப்பி வைத்தார்கள். இவர்கள் திரும்பிச் சென்று, நான்கு மாதத்திற்குப் பிறகு நபி (ஸல்) அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள்.

நபி (ஸல்) அவர்களின் இறுதிப்போர் தபூக் போர் ஆகும். மேலும், நபி (ஸல்) அவர்கள் அனுப்பி வைத்த இறுதிப்போர்ப்படை உஸாமாவின் போர்ப்படை ஆகும். உஸாமாவின் படைக்கு முன்னதாக ஒரு படை சென்றது. இது குறித்து புகாரியில் ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைத் (ரலி), ஹஸ்ரத் ஜாஃபர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு ரவாஹா (ரலி) ஆகியோர் ஷஹீதான செய்தியை மக்களுக்கு அறிவித்தார்கள். அப்பொழுது

பெருமானார் (ஸல்) அவர்களின் கண்கள் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தன. இதையடுத்து நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பிறகு, அல்லாஹ்வின் வாள்களில் ஒரு வாள் காலித் பின் வலீத் இஸ்லாத்தின் கொடியைப் பற்றிப் பிடித்தார். அல்லாஹ் அவருடைய கைகளால் முஸ்லிம்களுக்கு வெற்றியை வழங்கினான்.

ஹஜ்ஜத்துல் விதாவிலிருந்து திரும்பி வந்த பொழுது, நபி (ஸல்) அவர்கள் மதீனா வந்தடைந்தபோது, முஸ்லிம்களுக்கு தெற்கு திசையிலிருந்து எந்தவித ஆபத்தும் இருக்கவில்லை. ஆனால், வடக்கிலிருந்து ரோமானிய மக்களின் மூலம் வரும் ஆபத்து இன்னும் இருந்தது. ஏனென்றால், அந்தக் கிறிஸ்தவர்கள் அதுவரையிலுமே தங்களுடைய ஆற்றல் குறித்து மிகவும் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஆகையால் எந்நேரமும் அவர்கள் புறமிருந்து தாக்குதல் நடக்க வாய்ப்பிருந்தது. அவ்வாறே இன்னும் மூத்தா போரின் ஷஹீத்களுக்காக பழிவாங்க வேண்டியதும் இருந்தது. ஏனென்றால் அந்தப் போரில் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் திறமையின் காரணமாக, முஸ்லிம்களின் படை மதினா திரும்புவதில் வெற்றி கண்டது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஜ் முடிந்து மதினாவுக்குத் திரும்பி வந்து அதிக நாட்கள் ஆகியிருக்கவில்லை. இந்நிலையில், பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸாமா பின் ஸைத் (ரலி) அவர்களின் தலைமையில், ஒரு படைக்கு சிரியா மீது தாக்குதல் தொடுக்க கட்டளையிட்டார்கள்.

நபி (ஸல்) அவர்கள் நோய்வாய்ப்படுவதற்கு முன்பு துவங்கியிருந்த இந்தப் படைக்கான ஆயத்தப்பணி, நபி (ஸல்) அவர்களின் வஃபாத்துக்கு இரண்டு தினங்கள் முன்பு சனிக்கிழமை அன்று முழுமை அடைந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஃபர் மாதத்தின் இறுதியில் ரோமானியர்களுடன் போரிடக் கட்டளையிட்டார்கள். இந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களை அழைத்துக் கூறினார்கள்: உம் தந்தை ஷஹீதான இடத்திற்குச் செல்வீராக! அவர்களை, அதாவது, எதிரிகளை நசுக்கி விடுவீராக! நான் உம்மை இந்தப் படையின் அமீராக நியமித்துள்ளேன்.

ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்கள் தம் கைகளால் கட்டிய கொடியை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள். அதை ஹஸ்ரத் புரைதாஹ் பின் ஹுஸைப் (ரலி) அவர்களிடம் ஒப்படைத்தார்கள். ஜுர்ஃப் எனும் இடத்தில் படையை ஒன்று திரட்டினார்கள். ஜுர்ஃப் மதினாவில் இருந்து 3 மைல் தொலைவில் வடக்கு திசையின் ஒரு பகுதியாகும். முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாரிகளின் கண்ணியமிக்க மக்களில் ஏறத்தாழ அனைவரும் இந்தப் படையில் இணைந்திருந்தார்கள். அவர்களில் ஹஸ்ரத் அபூபக்ர், ஹஸ்ரத் உமர், ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ், ஹஸ்ரத் ஸஅத் பின் அபீ வக்காஸ், ஹஸ்ரத் ஸயீத் பின் ஸைத், ஹஸ்ரத் கதாதா பின் நுஅமான் மற்றும் ஹஸ்ரத் ஸல்மா பின் அஸ்லம் (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) ஆகியோரும் இருந்தார்கள். இந்த அனைத்து மகத்துவமிக்க சஹாபா (ரலியல்லாஹு அன்ஹும்) மீது ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் அமீராக நியமிக்கப்பட்டார்கள்.

இவ்வளவு பெரிய பெரிய சஹாபாவுக்கு ஓர் இளைஞனை அமீர் ஆக்கிவிட்டார்கள் என்று மக்கள் பேச துவங்கி விட்டார்கள். விஷயம் நபி (ஸல்) அவர்கள் வரை போனது. அப்பொழுது பெருமானார் (ஸல்) அவர்கள் மிகுந்த விருப்பமின்மையை வெளிப்படுத்தினார்கள். மேலும், மிம்பரில் ஏறி மக்கள்முன் உரை நிகழ்த்தினார்கள். அதில் உஸாமா (ரலி) அவர்கள் மற்றும் அவர்களின் தந்தை ஹஸ்ரத் ஸைத் (ரலி) அவர்கள் தொடர்பாக மிகவும் சிறந்த விஷயங்களைக் கூறினார்கள்.

ஒருபக்கம் நபி (ஸல்) அவர்களின் நோய் அதிகமாகிக் கொண்டிருந்தது. மறுபக்கம் நபி (ஸல்) அவர்கள், “எந்நிலையிலும் உஸாமாவின் படை புறப்பட

வேண்டும்” என்று வலியுறுத்திக் கொண்டிருந்தார்கள். உஸாமா (ரலி) அவர்கள் ஞாயிற்றுக்கிழமை ஜுர்ஃப் எனும் இடத்திலிருந்து நபி (ஸல்) அவர்களை சந்திக்கத் திரும்பி வந்தார்கள். நபி (ஸல்) அவர்களால் பேச முடியாமல் இருந்தது. ஆனால் இரண்டு கைகளையும் வானை நோக்கி உயர்த்தி விட்டு, உஸாமா (ரலி) அவர்களின் தலை மீது வைத்து விடுவார்கள். இது நபி (ஸல்) அவர்கள் உஸாமா (ரலி) அவர்களுக்காக துஆ செய்வதாக இருந்தது.

திங்கட்கிழமை நபி (ஸல்) அவர்களின் உடல்நிலை சற்று தேறியது. எனவே, நபி (ஸல்) அவர்கள் உஸாமா (ரலி) அவர்களிடம், “அல்லாஹ்வுடைய அருளினால் புறப்படுவீராக” என்று கூறினார்கள். உஸாமா (ரலி) அவர்கள் படைக்குத் திரும்பி வந்தார்கள். புறப்படக் கட்டளையிட்டார்கள். சரியாக அதே நேரத்தில், உஸாமா (ரலி) அவர்களுக்கு நபி (ஸல்) அவர்களின் இறுதி நொடிப்பொழுதுகள் பற்றி செய்தி கிடைத்தது. அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி) முதலிய சஹாபா பெருமக்களை உடன் அழைத்துக் கொண்டு திரும்பி வந்தார்கள். அந்த நேரத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இறக்கும் தருவாயில் இருந்தார்கள். சற்றே நேரத்திற்குப் பிறகு ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள்.

ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களுடைய படை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்த பிறகு புறப்பட்டது. இந்தப் படையில் ஆயிரம் குதிரை வீரர்கள் உட்பட மூவாயிரம் வீரர்கள் இருந்தார்கள். இந்தப் படை வெற்றியுடன் திரும்பி வந்தது. எதிரி ஒருவன் கொல்லப்பட்டான். அல்லது சிறைபிடிக்கப்பட்டான். முஸ்லிம்களில் எவருக்கும் எந்த இழப்பும் ஏற்படவில்லை.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* போர்களுடைய குறிப்பு நிறைவடைந்தது. இனி நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் மற்ற சில அம்சங்களைப் பற்றிய குறிப்பைப் பார்க்கிறேன்.

*இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் இரண்டு மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துக் கூறினார்கள். முதல் குறிப்பு,* ***ஜமாஅத் முரப்பி மதிப்பிற்குரிய அஸீஸுர் ரஹ்மான் காலித் சாஹிப்*** *அவர்களுடையதாகும். இரண்டாவது, குறிப்பு,* ***இந்தோனேஷியாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய எய்தி ஹுமைய்தி சாஹிப்*** *அவர்களுடையதாகும். இவர்கள் கடந்த நாட்களில் உம்ரா செய்யும் பாக்கியம் பெற்றபிறகு நோய்வாய்பட்டு மதினா முனவ்வராவில் வஃபாத் ஆகி விட்டார்கள். இவர்கள் ஜன்னத்துல் பக்கீயில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.*

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் இவர்கள் இருவருக்கும் ஜனாஸா காயிப் தொழ வைப்பதாக அறிவிப்பு செய்தார்கள். இந்த இரண்டு மர்ஹூம்களின் பாவமன்னிப்பு மற்றும் அந்தஸ்தின் உயர்வுக்காக துஆவும் செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا

مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِیَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ

اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِی الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ

يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி ஸாஹிர் ஹுஸைன்)**